00137

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 5

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 01 – 2022/2023

**LLU 5709– நிர்வாகச் சட்டம்**

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

திகதி:- 22.09.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30

ஒரு (01) வினாவிற்கு மட்டும் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

**1.** சுற்றுலா சபை ஆனது சுற்றுலா சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நியதிச்சட்ட உறுப்பு ஒன்று ஆகும். சுற்றுலா நிறுவனங்களை பதிவு செய்யவும், ஒழுங்குபடுத்தவும், கண்காணிக்கவும் சுற்றுலா சபைக்கு அதிகாரம் உள்ளது. சட்டத்தின் பிரிவு 10 ஆனது " சுற்றுலா சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட செயலாக்க குழுவிடம் (Technical Committee) இருந்து அறிக்கையை பெற்ற பின்னர் மாத்திரம் சுற்றுலா சபையின் கீழ் ஹோட்டல்கள் மற்றும் பிற தங்குமிடங்களை பதிவு செய்ய சுற்றுலா சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடுகிறது. சட்டம் மேலும் தெரிவிப்பதானது, சபையின் தீர்மானம் ஆனது இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

ருமேஷ் என்பவன் தான் புதிதாக கட்டிய விருந்தினர் தங்குமிடத்தை சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்வதற்கு ஒரு விண்ணப்பம் ஒன்றை முன்வைத்தான். சபையானது அவனது விண்ணப்பத்தை செயலாக்க குழுவின் அறிக்கையைப் பெறாது, "விருந்தினர் தங்குமிடம்" என்பது சட்டத்தின் கீழ் "ஹோட்டல்கள் மற்றும் பிற தங்குமிடங்கள்" எனும் வரைவிலக்கணத்திற்குள் உள்ளடங்காது எனச் சுட்டிக்காட்டி நிராகரித்தது. ருமேஷ் தான் எதிரணி அரசியல் கட்சியின் ஒரு உறுப்பினர் என்பதாலேயே அவனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது எனக் குற்றம் சாட்டினான்.

ருமேஷ் சபையின் தீர்மாத்தை வெற்றிகரமாக கேள்விக்குட்படுத்துவதற்கான காரணிகள் குறித்து உமது அறிவுரையை நாடுகின்றான்

(அ) பொருத்தமான நிர்வாகச்சட்ட கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பனவற்றுடன் அறிவுறுத்துக. (14 புள்ளிகள்)

(ஆ) சுற்றுலா சபை ஆனது செயலாக்க குழுவிடம் இருந்து அறிக்கை ஒன்றைப் பெற்ற பின்னர் இதே தீர்மானத்தை மேற்கொண்டிருப்பின் உமது விடை வேறுபடுமா? உமது விடையை பொருத்தமான சான்றுகளுடன் ஆதாரப்படுத்துக.

(06 புள்ளிகள்)

00137

**2.** வலுவேறாக்கக் கோட்பாட்டின் வகிபங்கு மற்றும் நிர்வாகச் சட்டத்திற்குள் அதன் நிலை என்பன குறித்து அதிகரித்து வரும் ஆக்கங்கள் காணப்படுகின்றன. சிலவற்றிற்கு இக்கோட்பாடானது நிர்வாகச் சட்டத்தின் மத்தியக் கோட்பாடாக இருப்பதுடன், இதுவன்றி நீதியியல் இடையீடுகள் நிச்சயமற்ற அடிப்படைகளில் முடிவடைவதாக உள்ளது. பிறவற்றிற்கு, நீதியியல் இடையீடுகளது சகல சந்தர்ப்பங்களையும் விளக்க தகைமையற்ற ஊறு விளைவிக்காத கற்பனையொன்றாக காணப்படுவதுடன் நீதியியல் மீளாய்வின் அபிவிருத்திகளிற்கான உண்மையான நியாயப்படுத்துகைகளை மறைப்பதற்கு நீதித்துறையை அனுமதிக்கும் மோசமான ஒரு கருவியாகவும் உள்ளது.

Craig P, " Ultra Vires and the Foundations of Judicial Review" (1998) 57 the Cambridge Law Journal 63

மேற்குறிப்பிட்ட கூற்றின் பின்னணியில் பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.

(அ) நிர்வாகச் சட்டத்தின் கீழ் வலுவேறாக்கக் கோட்பாடு எனும் கோட்பாட்டின் பொருளை பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

(ஆ) இலங்கையின் நிர்வாக வழக்குகளின் வலிதாந்தன்மையை வலுவேறாக்க கோட்பாடு எவ்வாறு உறுதி செய்கிறது என நுணுக்கமாக ஆராய்க. உமது விடை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் இலங்கையில் இருந்து சமகால உதாரணங்கள் என்பவற்றுடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

**(12 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -